**பாடம் - 1**

**الدرس الأول**

## நோன்பின் சட்டம்

## حكم الصيام

ரமழான் மாதம் நோன்பு நோற்பது இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளில் ஒன்றாகும்.

عَنْ ابْنِ عُمَرَ ﷺ قَالَ: قَالَ رَسُولُ الله ﷺ : بُنِيَ الْإِسْلَامُ عَلَى خَمْسٍ شَهَادَةِ أَنْ لَا إِلَهَ إِلَّا اللهُ وَأَنَّ مُحَمَّدًا رَسُولُ اللهِ وَإِقَامِ الصَّلَاةِ وَإِيتَاءِ الزَّكَاةِ وَالْحَجِّ وَصَوْمِ رَمَضَانَ (خ/٨، م/١٦)

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘இஸ்லாம் ஐந்து அடிப்படை கடமைகள் மீது நிறுவப்பட்டுள்ளது. அவை வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை, முஹம்மத்(ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என்று உறுதியாக நம்புவது, தொழுகையை நிலை நாட்டுவது, ஜகாத் கொடுப்பது, ஹஜ் செய்வது ரமழானில் நோன்பு நோற்பது ஆகியவையாகும்.’(புகாரி-8, முஸ்லிம்-16)

நோன்பு என்பது அல்லாஹ்வின் பால் நெருங்கும் எண்ணத்துடன் பஜ்ரு உதயமானதிலிருந்து சூரியன் மறையும் வரை உண்ணாமல், பருகாமல், உடலுறவு கொள்ளாமல் இன்னும் நோன்பை முறித்து விடக்கூடிய ஏனைய காரியங்களை விட்டும் விலகியிருப்பதாகும். ரமழான் மாதம் நோன்பு நோற்பது கடமை என்பது முஸ்லிம்களின் ஏகோபித்த முடிவாகும். அல்லாஹ் கூறுகிறான்:

﴿فَمَنْ شَهِدَ مِنكُمُ الشَّهْرَ فَلْيَصُمْهُ﴾ [البقرة:١٨٥]

‘உங்களில் யார் அம்மாதத்தை அடைகிறாரோ அதில் அவர் நோன்பு நோற்கட்டும்.’ (2:185)

இது புத்தி சீர் நிலையிலுள்ள, பருவ வயதை அடைந்த ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கட்டாயக் கடமையாகும். பருவமடைதல் என்பது 15 வயது பூர்த்தியாவது, அல்லது மர்மஸ்தானத்தில் முடி முளைப்பது, அல்லது கனவில் இந்திரியம் வெளிப்படுவது போன்றவற்றால் ஏற்படுகிறது. கூடுதலாக ஒரு பெண்ணுக்கு மாதவிடாய் ஏற்படுதல் எனும் காரணமும் உண்டு. ஆக ஒருவனுக்கு இக்காரணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்பட்டு விட்டால் அவன் பருவ வயதை அடைந்தவனாகிறான்.

### ரமழானின் சிறப்புகள்

அல்லாஹ் ரமழான் மாதத்தை ஏனைய மாதங்களுக்கில்லாத ஏராளமான சிறப்புகளைக் கொண்டு சிறப்பித்துள்ளான். அத்தகைய சிறப்புகளில் சில:

1. நோன்பாளிகள் நோன்பு திறக்கும் வரை அவர்களுக்காக மலக்குகள் பாவமன்னிப்புத் தேடுகின்றனர்.
2. மூர்க்கத்தனமான ஷைத்தான்கள் விலங்கிடப்படுகிறார்கள்.
3. ஆயிரம் மாதங்களை விட சிறப்பான மகத்துவமிக்க ஓர் இரவு இதில் உள்ளது.
4. ரமழானின் கடைசி இரவில் நோன்பாளிகளுக்கு மன்னிப்பு வழங்கப்படுகிறது.

5. ரமழானின் ஒவ்வொரு இரவிலும் அல்லாஹ் நரகிலிருந்து சிலரை விடுதலை செய்கிறான்.
6. ரமழானில் செய்கின்ற உம்ரா, ஹஜ்ஜுக்குச் சமமாகும்.

**மேலும் சங்கைக்குரிய இம்மாத்தின் சிறப்பு பற்றி வந்துள்ள நபிமொழி இதோ:**

عن أَبِي هُرَيْرَةَ ﷺ أَنَّ رَسُولَ اللهِ ﷺ قَالَ: مَنْ صَامَ رَمَضَانَ إِيمَانًا وَاحْتِسَابًا غُفِرَ لَهُ مَا تَقَدَّمَ مِنْ ذَنْبِهِ (م/ ٧٦٠)

'ஈமானுடனும் நற்கூலி கிடைக்கும் என்ற எண்ணத்துடனும் யார் ரமழானில் நோன்பு நோற்கிறாரோ அவருக்கு அவர் முன் செய்த பாவங்கள் மன்னிக்கப் படுகின்றன.' என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (புகாரி-38, முஸ்லிம்-760)

عَنْ أَبِي هُرَيْرَةَ ﷺ قَالَ: قَالَ رَسُولُ اللهِ ﷺ : كُلُّ عَمَلِ ابْنِ آدَمَ يُضَاعَفُ الْحَسَنَةُ عَشْرُ أَمْثَالِهَا إِلَى سَبْعِمِائَةِ ضِعْفٍ قَالَ اللهُ عَزَّ وَجَلَّ إِلَّا الصَّوْمَ فَإِنَّهُ لِي وَأَنَا أَجْزِي بِهِ ... (م/ ١١٥١)

ஆதமின் மகன் செய்கின்ற ஒவ்வொரு நற்செயலுக்கும் பத்திலிருந்து எழுநூறு மடங்குகள் வரை கூலி கொடுக்கப்படும். அல்லாஹ் கூறுகிறான்: 'நோன்பைத் தவிர. ஏனெனில் நோன்பு எனக்குரியது அதற்கு நானே கூலி கொடுப்பேன்.' நபிமொழி.(முஸ்லிம்-1151)